செ.வெ.எண்: 751 நாள்: 06.11.2019

**புதுக்கோட்டை மாவட்டத்தில் 5,755 மெ.டன் யூரியா கூட்டுறவு மற்றும் தனியார் விற்பனை நிலையங்களில் மூலம் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி.இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் 5,755 மெ.டன் யூரியா கூட்டுறவு மற்றும் தனியார் விற்பனை நிலையங்களில் மூலம் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:

புதுக்கோட்டை மாவட்டத்தில் சம்பா நெற்பயிர் 66,605 எக்டர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது நடப்பாண்டு பருவமழை முன்னதாகவே பெய்ததால் காவிரி டெல்டா உள்ளிட்ட அனைத்து வட்டாரங்களிலும் நெற்பயிர் மேலுரம் இடும் தருவாயில் உள்ளது. இதற்கு வேளாண்மைத்துறை மூலம் தேவையான உரங்களை பெறுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடந்த அக்டோபர் மாதம் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு தேவையான 5,700 மெ.டன் உரங்களில் 2,984 மெ.டன் உரங்கள் பெறப்பட்டுள்ளது. ஏற்கனவே இருப்பிலுள்ள 4,422 மெ.டன் யூரியா மற்றும் அக்டோபர் 2019-ம் மாதம் பெறப்பட்ட 2,984 மெ.டன் யூரியா என ஆக மொத்தம் 7,406 மெ.டன்னில், 5,755 யூரியா கூட்டுறவு மற்றும் தனியார் விற்பனை நிலையங்களின் மூலம் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

தற்பொழுது நடப்பு நவம்பர் மாதத்திற்கு தேவையான 7,130 மெ.டன்கள் யூரியா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் நிறுவனம் வாரியாக ஒதுக்கீடு செய்யப்பட்டு புதுக்கோட்டை மாவட்டத்திற்கு 268 மெ.டன்கள் வரப்பெற்றுள்ளது. மேலும் தொடர்ச்சியாக பல்வேறு நிறுவனங்களில் இருந்து உற்பத்தி செய்யப்பட்டு யூரியா வரும் நாட்களில் 1,200 மெ.டன்கள் பெறுவதற்கு உத்தரவு பெறப்பட்டுள்ளது. தற்போது தனியார் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களில் 1,919 மெ.டன்கள் யூரியா இருப்பில் உள்ளது.

மேலும் இது தவிர 2,559 மெ.டன்கள் டி.ஏ.பி., 1,388 மெ.டன்கள் பொட்டாஷ், 3,671 மெ.டன்கள் காம்ளக்ஷ் உரங்கள் இருப்பு வைக்கப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே விவசாயிகள் தங்கள் பகுதியிலுள்ள கூட்டுறவு மற்றும் தனியார் விற்பனை நிலையங்களில் தங்களுடைய ஆதார் அட்டைகளை எடுத்துச் சென்று தங்களுக்கு தேவையான உரங்களை வாங்கி பயன்பெறலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**